2023 ஏப்ரல் 13]

அதேபோன்று கழிப்பறை வசதிகள், அவையும் 1966 இல் கட்டப்பட்ட கட்டடங்கள்தான். எனவே, அவற்றையும் சீரமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்னவுடனேயே, உடனடியாக இந்த ஆண்டு அந்த அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இந்த ஆண்டு சுமார் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவர்களுக்குக் கருவிகள், தளவாடங்கள், உபகரணங்கள் போன்ற நவீன தொழில்நுட்பக் கருவிகள் வாங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிவிப்புகள்

(அ) சமத்துவ நாள் உறுதிமொழி நிகழ்ச்சி, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் வகையில் பேரவையை தற்காலிகமாக ஒத்திவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சமத்துவ நாளை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்கள் இன்று 13–4–2023 காலை 11–00 மணிக்கு தலைமைச் செயலக பிரதானக் கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில், சமத்துவ நாள் உறுதிமொழி செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில், பேரவை தற்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 11–15 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர்,பேரவை முற்பகல் 10–47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் முற்பகல் 11.15 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கான கால அவகாசம் நீட்டித்திருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள். திரு. செ. ராஜேஷ் குமார் அவர்களுக்குத்தான் கேள்வி கேட்க வாய்ப்பு தருகிறேன் என்று சொல்லியாகிவிட்டதே! நீங்கள் உட்காருங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று, நம்முடைய தமிழக அரசின் சார்பில், குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு மூன்று மாத காலம் அவகாசம் கொடுக்கப்பட்டது. அந்தக் காலக்கெடுவை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டித்திருப்பது என்பதுதான் மிகப் பெரிய அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது. ஓர் ஆணையத்திற்கு. . . (குறுக்கீடு) இல்லை, இல்லை. (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*